6. அரசினர் தீர்மானம்.

பேரவை விதி 32-ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்--விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 22—3—1993 அன்று தளர்த்தி அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

பிற்பகல் 2.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்),

மறுப்போர் ' இல்லை ' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 22—3—1993 திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.10 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.